**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.153** **நாள்: 01.11.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டு மழைநீர் செல்ல வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.**

****** *****

2015 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்கு பின் தண்ணீர் தேங்கும் இடங்களாக 306 இடங்கள் கண்டறியப்பட்டு அதில் 126 இடங்களில் மழைநீர் வடிகால்வாய்களை பழுதுபார்த்தும் 52 இடங்களில் சாலைகளின் சரிவு மட்டத்தை சீர் செய்தும் நீர் தேங்காமல் செய்யப்பட்டது. மீதமுள்ள 129 இடங்களில் புதியதாக இணைப்பு கால்வாய்கள் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொது பணித்துறை மூலம் கட்டப்பட்டு இவையாவும் சீர் செய்யப்பட்டுள்ளது.

மேலும் உலக வங்கி நிதிப் பெற்று சென்னையின் விரிவாக்கப்பட்ட பகுதிகளான ஆலந்தூர், வளசரவாக்கம் மற்றும் அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் ரூ.1104 கோடிகளில் 376 கி.மீ நீளத்திற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு அதில் 300 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டு அவையாவும் நீர் செல்லும் பெரிய வடிகால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சென்னை முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ள வடிகால்வாய் விவரம் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள வடிகால்வாய் விவரங்கள் மண்டலங்கள் வாரியாகவும் மற்றும் வார்டு வாரியாகவும் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி பருவமழை காலங்களில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பேரிடர் மேலாண்மை திட்டம் கையேடு 2017ஐ வெளியிட்டது. இதில் பேரிடர் காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய பணிகள் துறைவாரியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் துறைவாரியாக அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் போன்ற விவரங்களும் இக்கையேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

மண்டலம் 1 முதல் 15 வரை உட்பட்ட பகுதிகளுக்கு தேவையான விவரங்களை இக்கையேட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் (www.chennaicorporation.gov.in) என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து பொதுமக்கள் பயன்பெறலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**